கூரை ஓடுகள்:-
மான் மார்க், தேனீ மார்க்,
புலி மார்க், நாருனி மார்க்,
செவன ஓடுகள்.
M. T. சோமசுந்தரம்
& சன்ஸ்
199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தந்தி: பாதுகாதேவி
தொலைபேசி: 23845

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

பூச்சாடிகள்
Floor Tiles
கிறில்
(நவீன டிசைன்கள்)
உங்கள் ரசனைக்கேற்றவாறு
தெரிவு செய்துகொள்ளுங்கள்.
M. T. Somasundaram
& Sons
Ceylon Tiles Merchants
199, Power House Road
JAFFNA.
Gram: Pathukathevi
Phone: 23845

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸ்ரீ மார்கழி மீ 03 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 05 (18-12-1985) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:- 22

★ புல்டோஸருடன் வந்த ஆயுதப்படையினர்

# வலந்தலை, பொன்னாலையில் துப்பாக்கிப் பிரயோகம்

## இருவர் மரணம் : ஐவர் காயம்

— அலுவலகச் செய்தியாளரும், காரைநகர் செய்தியாளரும் —

யாழ்ப்பாணம், டிச. 18

காரைநகர் வலந்தலைச் சந்தியிலும் பொன்னாலைச் சந்தியிலும் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தில இரண்டு பேர் மரணமானார்கள்.

ஐந்து பேர் படுகாயம் அடைந்தனர்.

இறந்தவர்களின் சடலங்கள் முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இவர்கள் அடையாளம் காணப்படவில்லை.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உடனடியாக சேர்க்கப்பட்ட காயமடைந்த ஐவருக்கும் அவசர சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஐவரில் இருவரின் நிலை ஆபத்தாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

பேராசிரியர் கருணைநாதன், டாக்டர் செல்வகுமார் ஆகியோர் சத்திர சிகிச்சைகளைச் செய்தனர்.

காயம் அடைந்தஐந்து பேரின்விவரம் வருமாறு:

1 சண்முகம் பலணராஜ் வயது 23, இருல் வியாபாரி. பொன்னாலைச்சந்தியில் இருல் விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கையில் துப்பாக்கிக் குண்டு முன்புறமாக வந்து தாக்கியது.

இவருக்கு இரண்டு தொடைகளிலும் காயங்கள் ஏற்பட்டன.

2. நாகன் நவரத்தினம், வயது 25. இருல் வியாபாரி. இவரும்இருலை வாடிக்கு கொடுத்துக் கொண்டிருக்கையில் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளானார்.

வலது கை மூட்டில் இவருக்கு குண்டு பட்டது. பொன்னாலைச் சந்தியில் இது இடம்பெற்றது.

3. நாகேசன் இராஜரத்தினம், 35 வயது. கடற்றொழில் செய்பவர். பொன்னாலைச் சந்தியில் நின்று கொண்டிருந்த போது வயிற்றில் வலது பக்கத்தில் குண்டு தாக்கியது.

4. செல்லையா நித்தியானந்தன், வயது 43. கடற்றொழிலை முடித்துக் கொண்டு வருகையில் பொன்னாலைச் சந்தியில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்கு ஆளானார். இவருக்கு இரண்டு தொடைகளிலும் காயம் ஏற்பட்டது.

5. பெரியதம்பி சேனாதிராசா வயது 44. தொல்புரம் வாசி மினிவான் சாரதி. மூளாயில் இருந்து காரைநகருக்கு மினி வானை ஓட்டிச் செல்கையில் பொன்னாலைச்சந்தியில் வைத்து சூடு தாக்கியது.

தலை, வலதுகை, இடது கால், வயிறு ஆகிய இடங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

### பஸ், மினிபஸ்கள் மறிக்கப்பட்டன

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

செவ்வாய்க்கிழமை காலை 6·30மணிஅளவில் காரைநகர் முகாம் முன்பாக இ.போ.ச. பஸ் ஒன்றும்இரண்டு மினிபஸ்களும் மறிக்கப்பட்டன.

இ.போ.ச.பஸ், காரைநகரில் இருந்து மன்னாருக்கு பிரயாணிகளுடன் சென்றுகொண்டு இருந்தது.

மினிபஸ்கள் யாழ்ப்பாணம் நோக்கிப் பிரயாணிகளுடன் சென்று கொண்டிருந்தன.

முகாம் முன்பாக மறிக்கப்பட்ட இந்த பஸ்களில் ஆயுதப் படையினர் ஏறி பிரயாணிகளோடு பிரயாணிகளாகஅமர்ந்து கொண்டனர்.

இப்போது பஸ்ஸையும் மினி பஸ்களையும் ஜெட்டியில் உள்ள காரைநகர் மினிவான் தரிப்பு நிலையத்துக்கு விடும்படி ஆயுதப்படையினர் உத்தரவிட்டனர்.

அங்குபோன பின்னர், தாங்கள் செல்லும்வரை வாகனங்கள், ஆட்கள் எவரும் அந்த இடத்தை விட்டு அகலக் கூடாது என்று படையினர் உத்தரவிட்டனர்.

### வலந்தலையில்

பின்னர் அங்கிருந்து வலந்தலைச் சந்திக்கும் பொன்னாலைச் சந்திக்கும் இ.போ.ச. பஸ் மினி பஸ்கள் மூலம் ஆயுதப் படையினர் வந்தனர்.

காரைநகர் முகாமில்

(4-ம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



ஓம், ஓம், அதுவும் சரிதான். அவை இலங்கையைப் பிரிக்கக் கூடாது எண்டு கேட்சயிக்கை நாங்களும் எங்கடை தாயகத்தைப் பிரிக்கக் கூடாது எண்டு தான் சொல்லவேணும்; வடக்கு கிழக்கைஇணைக்கவேணும் எண்டு சொல்லத் தேவையில்லை.

## தபால் நிலையம் கொள்ளை

மட்டக்களப்பு, டிச. 18

மட்டக்களப்பு கோட்டைமுனை தபால் நிலையத்தில் நேற்றுக் காலை 2,100 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

ஆயுத பாணியாக வந்த மூவர் இக்கொள்ளையை நடத்தினர்.

# கீரிமலையில் வீடுகள் தீ வைப்பு

காங்கேசன்துறை, டிச. 18

கீரிமலை, வலித்தூண்டல் பகுதியில் நேற்று மூன்று வீடுகள் எரிக்கப்பட்டன. ஏழு பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை 11-30 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

இராணுவத்தினர் கனகரக வாகனங்களில் கீரிமலையில் இருந்து கரையோரப்பகுதியால் சென்றுகொண்டிருந்தனர்.

வலித்தூண்டல் என்னும் இடத்தில் அவர்கள் மீது கிரனைட் வீசப்பட்டதாம்.

இதையடுத்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்பகுதி மக்கள் பீதியால் வீடுகளை விட்டு ஓட்டம் பிடித்தனர்.

அப்பகுதியில் உள்ள 3 வீடுகள் தீக்கிரையாகின. அப்பகுதி ஒரே புகைமண்டலமாகக் காட்சி அளித்தது. ஹெலிக்கொப்டர் தாக்குதலும் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

ஏழு பேர் விசாரணைக்காக இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். அந்தியேட்டி ஒன்றுக்காக அவர்கள் கீரிமலைக்கு வந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

இப் பகுதியில் சிறு விமானம் ஒன்றும் வட்டமிட்டபடி இருந்தது. இச் சம்பவத்தால் இப்பகுதியில் ஒரே பதற்றம் நிலவியது.

## ரூ. 72,000 காசோலை அபகரிப்பு

நல்லூர், டிச. 18

யாழ். நகரில் நேற்றுக் காலை கட்டடச் சொந்தக்காரர் ஒருவரிடம் இருந்து ரூ. 72ஆயிரத்துக்கான காசோலை அபகரிக்கப்பட்டது.

சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:-

சம்பந்தப்பட்ட நபருக்கு யாழ்நகரில் சொந்தக் கட்டடம் ஒன்று இருக்கிறது. அதில் பிரபல்யம் வாய்ந்த அலுவலகம் ஒன்றும் இயங்கி வருகிறது.

நேற்றுக்காலை 7மணி அளவில் அவர் சுதுமலையில இருந்து யாழ்ப்பாணத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். இனந் தெரியாத நபர்களினால் அவரின் மோட்டார் சைக்கிள் வழி மறிக்கப்பட்டது. அவர் கடத்திச் செல்லப்பட்டு ஒரு மணி நேரத்தின் பின்னர் கௌரவமான முறையில் விடுவிக்கப்பட்டார்.

பின்னர் காலை 9 மணி அளவில் யாழ் நகரில் உள்ள தமது கட்டடத்துக்கு அவர் சென்று வாடகைப் பணமாக ரூ. 72 ஆயிரத்துக்கான காசோலையைப் பெற்றார்.

காசோலையைப் பெற்றுக்கொண்டு திரும்புகையில் காசோலை அவரிடம் இருந்து அபகரிக்கப்பட்டது.

### சுபநேரம்

18 - 12 - 1985

புதன்கிழமை

சுபநேரம்:

4-53 முதல் 6-23 வரை

ராகுகாலம்:

12-23 முதல் 1-53 வரை

இவை பஞ்சாங்கம் இராகுகாலம் பொருந்தும்

திருநெல்வேலி ஆசிரமம்

## சைக்கிளில் வந்த இளைஞர் தப்பினர்

மட்டக்களப்பு, டிச. 18

மட்டக்களப்பு வைரவன்கோயிலடியில் நேற்று சோதனையில் ஈடுபட்டிருந்த ஆயுதப்படையினர் சைக்களில் வந்த இளைஞர் ஒருவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

ஆனால் இளைஞர்காயம் படாமல் தப்பி ஓடிவிட்டார்.

நேற்று மாலை ஐந்து மணிக்கு இச்சம்பவம் நடந்தது.

## சயனைட் அருந்தி இரு போராளிகள் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 18

கஞவாஞ்சிக்குடியில் பொலீஸ் கொமோண்டோக்கள் வழிமறித்த போது இரண்டு போராளிகள் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்கள்.

மற்றொருவர் பக்கத்திலிருந்த வாவி ஒன்றுக்குள் பாய்ந்து நீந்தித் தப்பிக் கொண்டார்.

இச்சம்பவம் நேற்று நடைபெற்றது. மூன்று போராளிகளும் மோட்டார் சைக்கிளில் வந்த போது கொமோண்டோக்கள் இவர்களை வழிமறித்ததாகக் கூறப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து இரண்டு போராளிகள் சயனைட் அருந்தியதாகவும்—

மற்றவர் துப்பாக்கிச் சூட்டிலிருந்து தப்பி வாவிக்குள் பாய்ந்ததாகவும் கூறப்படுகிறது.

## தமிழர் தாயகத்தை துண்டு போட நாம் அனுமதிக்க மாட்டோம்

### சென்னையில் கூட்டணி அறிக்கை

சென்னை, டிச. 17

இலங்கையில் தமிழர் தாயகத்தைத் துண்டு போட நாம் எக்கட்டத்திலும் அனுமதிக்கமாட்டோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியால் சென்னையில் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டணியின் பொலிட்பீரோ கூட்டத்தின் முடிவில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

மாற்று யோசனைகளை இந்திய வெளிநாட்டமைச்சுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியிடம் கையளித்த பின்னர் கூட்டணி, அது குறித்து வெளிப்படையாகக் கருத்து தெரிவிக்காது இருந்து வந்தது.

ஆனால் இலங்கை ஜனாதிபதி அது குறித்து கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

வடக்கு, கிழக்கு, இணைப்பை தான் முற்றாக எதிர்ப்பதாக திரு. ஜெயவர்த்தனா கூறியிருக்கின்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சில விஷயங்களில் விட்டுக்கொடுத்தாலும் தமிழரின்தாயகத்தை துண்டு போட அனுமதிக்காது.

இப்படி அந்த அறிக்கையில் திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

## கட்டடங்கள் தகர்ப்பு

மட்டக்களப்பு, டிச. 18

செங்கலடி, பதுளை வீதியில் உள்ள கித்துள்வெவ கிராமத்தில் நான்கு அரச கட்டடங்கள் கடந்த ஞாயிறு இரவு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, அதிபர் விடுதி, குடியேற்ற அதிகாரி அலுவலகம், அவரின் விடுதி ஆகியவையே தகர்க்கப்பட்ட கட்டடங்களாகும்.

இதுபற்றி நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஏறாவூர் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

# கூட்டணியின் யோசனைகளை இலங்கை சாதகமான முறையில் பரிசீலனை

## ராஜீவ் நம்பிக்கை

சென்னை, டிச. 17

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளை இலங்கை அரசாங்கம் சாதகமான முறையில் பரிசீலனை செய்யும் என்று நம்புவதாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கருத்து வெளியிட்டார்.

கல்பாக்கம் அணு உயர் சக்தி உலையைத் திறந்து வைக்க தமிழ்நாடு வந்த பிரதமர் செவ்வாய் காலை புதுடில்லி திரும்பினார்.

அதற்கு முன்னர் பிரதமர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போதே, மேற்கண்ட நம்பிக்கையை பிரதமர் வெளியிட்டார்.

இலங்கையில் தமிழர்கள் தங்கள் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து அமைதியாக வாழ்வதையே பாரதம் விரும்புகின்றது.

இந்தியா வந்துள்ள தமிழ் அகதிகள் சுயமரியாதை, கௌரவத்துடன் இலங்கை திரும்பக் கூடிய தான சுமுகமானசூழ்நிலையைத் தோற்றுவிக்கவே பாரதம் முயற்சிக்கின்றது.

இப்படி பிரதமர் மேலும் சொன்னார்.

### மன்னாரில் தேடுதல்

மன்னார், டிச. 18

மன்னாரில் நான்காம் கட்டைப் பகுதியில் தாண்டிக்குளம், சாஸ்திரிக்குளம், பம்பைமடு, மரிக்கார் பனை ஆகிய இடங்களில் பாதுகாப்புப் படையினர் நேற்று கடும் தேடுதல் நடத்தினர்.

பிரபாகரன் என்ற கார்ச்சாரதியும், அவரது சகோதரரும் மற்றும் மூவரும் ஆயுதப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

## கொழும்பு -- யாழ் பஸ் வழிமறித்துக் கொள்ளை

யாழ்ப்பாணம் டிச. 18

திங்கட்கிழமை இரவு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த சொகுசு பஸ், ஒன்று புனைவை என்னுமிடத்தில் வழிமறிக்கப்பட்டது.

பஸ்ஸில் வந்த பிரயாணிகளிடமிருந்து பணம், கைக்கடிகாரங்கள், நகைகள், புடவைகள் இனந் தெரியாத நபர்களினால் கொள்ளை இடப்பட்டன.

10 பேர் கொண்ட ஆயுதம் தாங்கிய கோஷ்டியே இதைச் செய்தது.

திங்கள் இரவு 10 மணிக்கு கொழும்பில் இருந்து புறப்பட்ட இந்த பஸ், செவ்வாய் மாலை 4மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

### மற்றொரு பஸ்ஸிலும் கொள்ளை

யாழ்ப்பாணம், டிச. 18

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகளிடம் ஈரற்பெரியகுளத்தில் வைத்து பெரும் தொகையான பணம், நகைகள், உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை காலை கொழும்பிலிருந்து ரயிலில் வந்த பயணிகள் அனுராதபுரத்தில் வந்து இறங்கினர். அங்கிருந்து மினிபஸ்ஸில் யாழ்ப்பாணம் நோக்கி வந்தனர்.

ஈரற்பெரியகுளத்தில் மினிபஸ்ஸை மறித்த காடையர் கோஷ்டி ஒன்று, பயணிகளின் பொருள்களைக் கொள்ளை அடித்துச் சென்றது.

### கடத்தல்

காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் திங்கள் இரவு இனந்தெரியாத நபர்களால் 7 பரல் டீசல் எண்ணெய் டிராக்டர் ஒன்றுடன் கடத்திச் செல்லப்பட்டது.

டீசல், டிராக்டர் ஆகியவற்றின் பெறுமதி 3 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்டது எனக் கூறப்படுகிறது.

## செய்யாறில் அ. தி. மு. க வெற்றி

சென்னை, டிச. 17

செய்யாறு இடைத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றியீட்டியது.

அ.தி.மு.க. வேட்பாளரான திரு. வி. குப்புசாமிக்கு 59,043 வாக்குகளும் தி.மு.க வேட்பாளரான திரு. வி. அன்பழகனுக்கு 37,675 வாக்குகளும் கிடைத்தன. 21,368 வாக்குகள் பெரும்பான்மை.

போட்டியிட்ட ஏனைய எட்டு வேட்பாளர்களும் கட்டுப்பணத்தை இழந்தனர். மொத்தம் 1 லட்சத்து 478 வாக்குகள் பதிவாகின.

செய்யாறு தொகுதியின் அண்ணா தி. மு. க. எம். எல். ஏ. திரு. சி. முருகன் காலமானதைத் தொடர்ந்து இந்த இடைத் தேர்தல் நடந்தது.

மாபெரும் மலிவு விற்பனை
BATA பாட்டா
(Show Room)
19, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
நத்தார் மலிவு விற்பனை
சில தினங்களுக்கு மட்டுமே!
உங்கள் பாதங்களின் பாத அணி
பாட்டா!
விரைந்திடுவீர்!
அதன் வனப்பை தேர்ந்திடுவீர்
BATA BATA BATA BATA BATA

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சீனவுக்கு அமெரிக்க அணுசக்தி சாதனங்கள்

## புலவர் புலமைபித்தன் புகழ் பாடுகிறார் இங்கே!

கவிஞர் கண்ணதாசனின் மறைவுக்குப் பின்னர் அவரின் இடத்தை நிரப்பிக் கொண்டிருப்பவர் புலவர் புலமைப்பித்தன் தான்.

பூபாளக் குயில் புலமைப் பித்தன் புரட்சி நடிகரின் "குடியிருந்த கோயில்" படத்தில் இடம் பெறும் "நான் யார், நான் யார்? நீ யார்? நாலும் தெரிந்தவர் யார், யார்?" என்ற பாடல் மூலம் திரைக்கு அறிமுகமானவர்.

இப்படத்தின் குறிப்பிட்ட அந்தக் காட்சிக்கு நான்கைந்து கவிஞர்கள் பாட்டு எழுதியதாகவும்— ஆனால் அந்த அதிர்ஷ்டம் தனக்கே கிடைத்ததாகவும் புகழ் பாடுகிறார் புலவர்.

புலவர் இது பற்றி விவரிக்கையில்:

"நான் சென்னைக்கு வந்த ஒரு சமயம் இயக்குநர் கே. சங்கரைச் சந்தித்தேன். அண்ணன் எம். ஜி. ஆரின் படமான "குடியிருந்த கோயில்" படத்திற்காக ஒரு சூழ்நிலையைச் சொல்லி ஒரு பாடலை எழுதச் சொன்னார்.

அந்தக் காட்சிக்காக எத்தனையோ கவிஞர்கள் பாட்டு எழுதினார்கள். அதில் ஒன்றுமே தயாரிப்பாளர் வேலுமணிக்கோ, சங்கருக்கோ திருப்தியைத் தரவில்லை.

அன்று மாலைவேளையில் கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் வீதி வழியாக யோசித்தவாறே நடந்து கொண்டிருந்தேன். திடீரென மழை கொட்டியது. அருகில் இருந்த கடையில் ஒதுங்கினேன்.

அப்போது என் நினைவில் அந்தப் பாடல் மின்னலாய் வெட்டியது. உடனே கையில் இருந்த பையில் காகிதம் இல்லாததால் பையின் பின்னாலேயே பாடலை எழுதினேன்.

அடுத்த நாள் இயக்குநர் சங்கரிடம் கொடுத்தேன். அவர் அதை வேலுமணியிடம் காட்ட 'ஆஹா! இதல்லவோ நாம் தேடிக் கொண்டிருந்த பாடல்'' என்று ஏற்றுக் கொண்டார்.

ஒரு மாதம் சென்று பாடல் பதிவானது. இந்தப் பாடல் மூலமாகத் தான் நான் திரையுலகில் நுழைந்தேன்.''

இப்படித் தனது அதிசயமான திரைப் பிரவேசத்தை குறிப்பிடுகிறார் புலவர்.

தினசரி சினிமா

## உடன்படிக்கையில் றேகன் கையெழுத்து

வாஷிங்டன், டிச. 17

அணுசக்தி உற்பத்தி சாதனங்களை அமெரிக்கா சீனவுக்கு அனுப்பும்.

இதற்கான உடன்பாடு ஒன்றில் அமெரிக்க அதிபர் றேகன் கையெழுத்து இட்டுள்ளார்.

இத் தகவலை, அமெரிக்காவின் வர்த்தக அமைச்சர் கோல்ட்றிச் வெளியிட்டார்.

இதே நேரத்தில், கம்பியூட்டர் மற்றும் உயர் தொழில் நுட்ப சாதனங்களை சீனவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டையும் அமெரிக்கா தளர்த்தி உள்ளது.

இது அண்மைக்காலத்தில் சீன-அமெரிக்க வர்த்தக ரீதியிலான உறவில் ஏற்பட்ட பெரிய குறிப்பிடத்தக்க நடவடிக்கை என்று அமெரிக்க வர்த்தக அமைச்சர் சொன்னார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளுக்கு, காங்கிரஸ் பலத்த அதிருப்தி தெரிவித்துள்ளது.

அணுசக்தி உற்பத்திச் சாதனங்களை சீனவுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிப்பது குறித்து, காங்கிரஸின் பெரும்பாலான



உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அணு ஆயுத தயாரிப்பில் பாகிஸ்தான் மறைமுகமாக ஈடுபடுவதற்கு சீன உதவி அளித்து வருகின்றது என்ற கருத்து நிலவும்போது, அணுசக்தி உற்பத்திக்குத் தேவையான சாதனங்களை சீன ஏற்றுமதி செய்ய அனுமதிக்கலாமா? இது விவேகமற்ற செயல்— இப்படி காங்கிரஸ் உறுப்பினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அணு குண்டு தயாரிப்பதில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது என்று இந்தியாவும், இந்தியா ஈடுபட்டுள்ளதுஎன்று பாகிஸ்தானும் பரஸ்பரம் குற்றஞ் சாட்டி வரும் வேளையில், சீன-அமெரிக்க உடன்படிக்கை வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## இடி அமினின் ஆலோசகர் லண்டனில்

லண்டன், டிச. 17

உகண்டாவின் முன்னாள் சர்வாதிகாரி இடி அமினுக்கு ஆலோசகராக இருந்த பொப் ஆஸ்டில்ஸ் விடுதலையாகி லண்டனுக்குச் சென்றுள்ளார்.

பிரிட்டனிற் பிறந்த இவர் சம்பாலா சிறையில் ஆறுவருட காலம் சிறை வைக்கப்பட்டிருந்தார்.

லண்டன் விமான நிலையத்தில் இறங்கியதும் "எனது கைகளில் இரத்தக் கறைகள் இல்லை''— என்று அவர் சொன்னார்.

இடி அமினின் ஆட்சியில் இடம்பெற்ற காட்டுமிராண்டித் தனமான செயல்களில் தனக்கு எதுவித பங்கும் இல்லை என்றும் அவர் மறுத்தார்.

## ராஜீவ் - ஸியா இரு தரப்பு பேச்சுக்கள்

சென்னை, டிச. 17

இந்தியா செல்லும் பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா – உல் -ஹக் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் இரு தரப்பு உறவுகள் குறித்துப் பேசுவார்.

பேச்சுக்களுக்குத்திட்டவட்டமான ஆலோசனைகள் அடங்கிய பட்டியல் எதுவும் தயாரிக்கப்படவில்லை என்று இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் சொன்னார்.

## பிரிட்டனின் 3 கட்சிகளும் சம பலத்துடன்

லண்டன், டிச. 17

பிரிட்டனில் மூன்று பிரதான அரசியல் கட்சிகளும் சமபலத்துடன் விளங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டெய்லி டெலிகிராப் நாளிதழ் இது சம்பந்தமான ஆய்வு ஒன்றை நடத்தியது.

அந்த ஆய்விலேயே இத்தகவல் வெளியானது.

ஆளும் கன்சர்வேடிவ் கட்சிக்கு 33 சத வீத ஆதரவும—

தொழிற் கட்சிக்கு 32 சத வித ஆதரவும் சமூக ஜனநாயகக் கட்சிக்கு 32 சத வீத ஆதரவும் இருப்பதாக இந்த ஆய்வில் வெளியாகியுள்ளது.

ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் சாதனைகளை 34 சத வித மக்கள் ஆதரிக்கின்றனர்.

ஆளும் கட்சியின் போக்குக் குறித்து 54 சத வீதமானோர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

## பார்த்தவர் ஒருவர் பிடிபட்டவர் இன்னொருவர்

வாஷிங்டன், டிச 17

கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் உள்ள மாணவிகள் தங்கும் விடுதிக் கதவின் துவாரத்தின் ஊடாக பார்த்தவர் ஒருவர். அனல் கைதானவர் வேறொருவர்.

கைது செய்யப்பட்டவர் சீனவைச் சேர்ந்த பௌதிக மாணவர்.

இதனால் அமெரிக்க சீன உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

சீன மாணவரைக் கைது செய்த செயல் மனித உரிமைகளை மீறுவதாக உள்ளது என்று சீன குற்றஞ் சாட்டியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக அமெரிக்க அரசாங்கம் சீனத் தூதரகத்துடன் அடிக்கடி தொடர்பு கொண்டு உள்ளது.

தவறான ஒருவரைக் கைது செய்ததை அமெரிக்கப் பொலிஸார் ஒப்புக் கொண்டனர்.

## மழை ஓய்ந்தது

அம்பாறை, டிச18

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில வார காலமாகப் பெய்துவந்த பெருமழை ஓய்ந்து விட்டது.

## வெளி உலகில்

# விமான எதிர்ப்பு ஏவுகணைகளை

## லெபனான் --- இஸ்ரவேல் எல்லைக்கு சிரியா நகர்த்தியது

டெல்அவிவ், டிச. 17

தனது விமான எதிர்ப்பு ஏவுகணைகளை லெபனான்– இஸ்ரவேல் எல்லைக்கு சிரியா நகர்த்தியுள்ளது.

இதைத் தொடர்ந்து இஸ்ரவேல், அமெரிக்காவுடன் இடைவிடா தொடர்பு கொண்டுள்ளது.

பலஸ்தீனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணுவதை சிரியா விரும்புவதையே ஏவுகணைகள் நகர்த்தப்பட்டமைதெளிவாக எடுத்துக்காட்டுகின்றது—இப்படி இஸ்ரவேல் பிரதமர் ஷிமொன் பெரெஸ் குற்றஞ்சாட்டினார்.

## சித்திரவதையில் இறந்த போராளி

லிஸ்பன், டிச. 17

கைதான பாஸ்க் விடுதலை போராளி ஒருவரின் பிரேதம், கைகள் கட்டப்பட்ட நிலையில் ஆறு ஒன்றில் இருந்து கைப்பற்றப்பட்டது.

சித்திரவதையின் போது இப் போராளி இறந்தார் என்றும் ஸ்பெயின் அரசாங்கம், மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் பாஸ்க் விடுதலை இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஸ்பெயின் அரசின் சிவில் காவலாளர்களே இத் துன்புறுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ஸ்பெயின் நாட்டில் 'பாஸ்க்' இன மக்கள் மாநில சுயாட்சி கோரியே நீண்டகாலப்போராட்டம் நடத்துகின்றார்கள்.

ஸ்பெயின் அரசு, பாஸ்க் இன விடுதலைப் போராளிகள் பலரைப் பிடித்து சிறையில் வைத்துள்ளது.

## மக்கள் முகம்

### புதிய அதிபர்

யாழ்ப்பாணம், டிச. 18

திரு. க. சி. குகதாசன் எம். எஸ். ஸி. பதவி உயர்வு பெற்று சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபராக இன்று பதவியேற்கிறார் திரு. குகதாசன்.

இவர் யாழ் இந்துக் கல்லூரியில் நீண்டகாலம் தாவரவியல், விலங்கியல் பாடங்களைக் கற்பித்து வந்தவர்.

1969-ஆம் ஆண்டில் அமெரிக்க தேசிய விஞ்ஞான நிலையத்தின் பட்டதாரி ஆசிரியர்களுக்கான புலமைப் பரிசில் பெற்றவர் திரு. குகதாசன்.

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தில் பல ஆய்வுகள் மேற்கொண்ட பின்னர் இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சபைக்கு இவர் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகள் பின்பு ஆசிய பவுண்டேசன் நிலையத்தால் நூல் வடிவாக வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## விவசாய ஆசிரியர் சேவைகால பயிற்சி திருநெல்வேலியில் ஆரம்பம்

சாவகச்சேரி, டிச 18

திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இன்று 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை மூன்று தினங்களுக்கு விவசாய ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி நடைபெறும்.

விவசாய வட்டாரக் கல்வி அதிகாரி செல்வி தி. பெரியதம்பியின் வரவேற்புரையைத் தொடர்ந்து யாழ் கல்விப் பணிப்பாளர் திரு ம. சிவபாம்பிள்ளை ஆரம்ப உரை நிகழ்த்திப் பயிற்சி நெறியைத் தொடக்கி வைப்பார்.

உதவி விவசாயப்பணிப்பாளர் திரு. எஸ் கிருஷ்ணபிள்ளை, விவசாய ஆராய்ச்சியாளர் திரு. வீ. குகதாசன், திரு. கே. தேவசபை, ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. கே. சதாசிவமூர்த்தி ஆகியோர் முதல் நாளன்று கருத்துரைகள் வழங்குவர்.

இரண்டாம் நாள் பயிர்பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு. வி. சதிரமலை, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு. ஆ. சண்முகநாதன், விவசாய உத்தியோகத்தர் திரு சி நடராசா ஆகியோரும்— இறுதி நாளாகிய வெள்ளிக்கிழமை பரிசோதனை உத்தியோகத்தர் திருமதி எம். பஞ்சலிங்கம், ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி, எம். தனபாலச்சந்திரன், விவசாயஉத்தியோகத்தர் திரு எஸ். பரமானந்தம் ஆகியோரும் கருத்துரை வழங்குவார்கள்.

## அம்பாறை முஸ்லிம் பிரச்சினை குறித்து மாநாடு

அம்பாறை, டிச 18

அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களின் இன்றைய பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராய்வதற்கென விசேஷ மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை மாவட்ட சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ள இந்த மாநாடு எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறும்.

முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் கிழக்குப் பிராந்திய பணிப்பாளர் ஜனாப். எம். ஐ. உதுமாலெவ்வை தலைமையில், அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் மாநாடு நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது.

முழுநாள் நிகழ்வாக நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில் அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் 75 கிளைகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும், முன்னணியின் 25 ஆலோசகர்களும் பேராளர்களாகக் கலந்து கொள்வர்.

## பேஜோ கார் கடத்தப்பட்டது

மட்டக்களப்பு, டிச 18

கிழக்கிலங்கை காகிதக் கூட்டுத்தாபனத் தலைவரின் உத்தியோகபூர்வ பேஜோ 504 கார் ஞாயிறு பிற்பகல் கடத்தப்பட்டது.

இனந்தெரியாத ஆயுதந் தாங்கிய இளைஞர் கோஷ்டி மட்டக்களப்பு பார் வீதியில் உள்ள கூட்டுத்தாபனத் தலைவரின் இல்லத்தில் வைத்து இக் காரை கடத்தியது.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# அராலியில் பம்பாய் வெங்காய செய்கை பெருவெற்றி

### விவசாயிகள் ரூ. 80 லட்சம் வருமானம் பெற்றனர்

வட்டுக்கோட்டை, டிச.18

அராலி பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவாசாயிகள் இவ்வருடம் சுமார் 80 லட்சம் ரூபாவைப் பெற்றனர்.

பம்பாய் வெங்காயச் செய்கையில் சுமார் 170 விவசாயிகள் இங்கு ஈடுபட்டு வருகின்றனர். இந்த விவசாயிகளை நம்பி இங்கு 500 குடும்பங்கள் உள்ளன. இந்த ஆண்டு இங்கு சுமார் 13ஆயிரம் அந்தர் பம்பாய் வெங்காயம் அறுவடை செய்யப்பட்டது.

இலங்கையில் அராலியில்தான அதிக விஸ்திரணத்தில் பம்பாய் வெங்காயச் செய்கை நடைபெற்றுவருகின்றது.

பம்பாய் வெங்காயச் செய்கையை ஊக்குவிப்பதற்காக அராலிபம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சங்கத்தலைவர் திரு. நா. குகராசா சங்கத்தின் மூலம் பம்பாய்வெங்காய உற்பத்தியாளருக்கு வேண்டிய ஆலோசனைகளை விவசாயத்துறை அதிகாரிகளினால் வழங்கி வருகின்றார்.

அடுத்த ஆண்டு பெருந்தொகையான விவசாயிகளை பம்பாய் வெங்காய உற்பத்தியில் ஈடுபடுத்த இச்சங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## நல்லெண்ண சபை

பருத்தித்துறை, டிச. 18

அல்வாய் வடக்கு பஹாத்மா சனசமூக நிலையப் பகுதியில் வாழும் மக்களிடையே எழும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும், சமூக நலன்களைக் கவனிக்கவும் என நல்லெண்ண சபையொன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டுள்ளது.

இச்சபையின் தலைவராக திரு. கி. செல்லத்துரையும், செயலாளராக திரு. கே. அருமைத்துரையும், பொருளாளராக திரு சி முருகேசனும் தெரிவு செய்யப்பட்டனர்.

## காங்கேசனில் ரோந்து அதிகரிப்பு

காங்கேசன்துறை, டிச 18

காங்கேசன்துறைப் பகுதியில் தற்போது ஹெலிக்கொப்டர், சிறிய விமானம் ஆகியவற்றின் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

பலாலியிலும், காங்கேசன்துறையிலும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள பகுதிகளைச் சுற்றியே இந்த ரோந்து இடம்பெறுகிறது.

ஆயுதப் படையினருக்கான பொருள்கள் கப்பலில் வந்து இறங்குவதும் காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் அடிக்கடி கொள்ளைகள் நடைபெறுவதுமே ரோந்து அதிகரிப்புக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

## பருத்தித்துறையில் 10 இளைஞர் கைது

### நால்வர் பின்பு விடுதலை

பருத்தித்துறை, டிச 18

பருத்தித்துறை நகருக்கு திடீரென வந்த இராணுவத்தினர் பத்து இளைஞர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களில் நான்கு இளைஞர்கள் விசாரணைக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய ஆறு இளைஞர்களும் மேல்விசாரணைக்காக யாழ். இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

விடுதலைசெய்யப்படாத இளைஞர்கள் விவரம் வருமாறு:-

எம். தவராஜா, வியாபாரிமூலை, வி. ஜெயசீலன், தும்பளை, ஆர். செல்வராஜா, திருகோணமலை, ரி. நவரெத்தினராஜா, கலட்டி பருத்தித்துறை, எஸ். வரதராஜா, வியாபாரிமூலை, வி. கோபால பிள்ளை, நாகர்கோவில்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக, கைது செய்யப்பட்ட ஆறு இளைஞர்களையும் விடுதலை செய்யுமாறு பருத்தித்துறை பிரஜைகள் குழு யாழ். இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ஹமில்டன் வணசிங்காவைக் கேட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பிரஜைகள் குழு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

## லொறி வழி மறித்து கொள்ளை

கொழும்பு, டிச. 18

வெலிகமையில் இருந்து வந்த லொறி ஒன்று நற்பிட்டிமுனையில் வைத்து ஆயுதம் தாங்கிய 6 இளைஞர்களால் கொள்ளை அடிக்கப்பட்டது.

லொறியில் இருந்து ரூபா 3500 ரொக்கப் பணத்தை இளைஞர்கள் அபகரித்துச் சென்றனர்.

## அம்பனில் தளபாடங்கள் அபகரிப்பு

பருத்தித்துறை, டிச. 18

பருத்தித்துறைப் பகுதியிலுள்ள அம்பன் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் அலுவலகம் உடைக்கப்பட்டு அங்கிருந்த தளபாடங்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

துப்பாக்கி ஏந்திய இனந்தெரியாத கோஷ்டி ஒன்றே இக்கொள்ளையை நடத்தியது.

அம்பன் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. வீ. இராசையா சம்பவம் குறித்து மேலிடத்துக்குப் புகார் செய்தார்.

மொத்த - சில்லறை வியாபாரிகளுக்கும் பாவனையாளர்களுக்கும்!

ஒரு அரிய சந்தர்ப்பம்!!

'கிறிஸ்மஸ்' பண்டிகையை முன்னிட்டு

எம்மால் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட

பிளம்ஸ், றேசன்ஸ், கரண்ட்ஸ், DATES ஈச்சம்பழம் (புதியது)

சகல எசன்ஸ் வகைகளும் கவர்ச்சியான கழிவுடன் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

பெற்ரு

எசன்ஸ் சப்ளையர்ஸ்

223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.)

### உதய சங்கற்பம்

ஒருவன் அரசியல், சமூக சுதந்திரத்தைப் பெறலாம், ஆனால் அவன் விருப்பு, வெறுப்புகளுக்கு அடிமையாகிறன் அவனால் அந்தச் சுதந்திரத்தின் உண்மையான மகிழ்ச்சியை உணரமுடியாது.

-- சுவாமி விவேகானந்தர்


# உதயன்

உண்மை - அருஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, விசாகர நிலைய வீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22078

18-12-85 த. பெ. 23


## சொல்லும் செயலும் ஒன்ருக இருக்காதா?

நாட்டின் இனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு மூலம் முடிவு காணவேண்டும் என்ற விருப்பம் அரசாங்கத்துக்கு இல்லை. அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதே அதன் முழு விருப்பமும் ஆகும்.

இப்படிச் சொல்பவர் வேறு யாரும் அல்லர். இந்த நாட்டின் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியே ஆவார்.

நாளாந்தம் பத்திரிகைகளில் படிக்கும் செய்திகளையும், அமைச்சர் அத்துலத்தின் புதிய பேச்சையும் நோக்கும்போது யார், யாரை ஏமாற்றுகிறார்கள் என்ற ஒரு மயக்க நிலை எவருக்கும் ஏற்படாமல் இருக்க முடியாது.

வடக்கு,கிழக்கு மாகாணங்களில்முன் எப்போதும் இல்லாத விதத்தில் இடபோது ஓர் போர் நிலைமை தோன்றிவருகிறது கவச வாகனங்கள், கனரக வாகனங்கள், நவீன ஆயுதங்கள் என்று வந்து குவிகின்றன. இராணுவ ஆளணியும் நாளுக்குநாள் இப்பகுதிகளில் அதிகரிக்கப்படுகிறது.

தமிழ்ப்பகுதிகளில் எந்தப் பக்கத்தில் இன்றைக்கு எத்தனைபேர் சுட்டுக் கொல்லப்படுவார்களோ? நாஞே எனது இரத்தத்தின் இரத்தங்களில் எவருமோ கொல்லப்படுவோரில் ஒருவராக இருப்போமோ? தமிழன் ஒவ்வொருவனும் காலையில் எழுந்ததும் அவன் மனதில் எழும் கேள்விகள் இவை.

அந்த அளவுக்கு பாதுகாப்புப் படைகளின் கெடுபிடிகள் தமிழ்ப் பகுதிகளில் அதிகரித்துவிட்டன. அப்பாவி மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுகிறார்கள். அதனை அரசே பல தடவைகள் ஒப்புக்கொண்டும் உள்ளது.

இனப்பிரச்சினையை அரசியல் தீர்வு மூலம் களையவேண்டும் என்ற நோக்கம், இதயசுத்தி அரசாங்கத்துக்கு இருக்கிறதா? அவ்வாறானல் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவிட்டு படை பலத்தைப் பெருக்க வேண்டியதன் அவசியம் என்ன?

பாவம் அறியா அப்பாவித் தமிழ் மக்களை கொன்றுகுவிப்பதுதான் ஏன்? அரசாங்கத்தின் சக்தியையும் நேரத்தையும் இந்தப் பக்கமாகச் செலவு செய்வதேன்?

இந்தக் கேள்விகளுக்கும் அமைச்சர் லலித் பதில் தரத் தவறவில்லை.

அரச படைகள் எவ்வளவு சக்தி உடையனவாக இருந்தாலும் இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது. ஆனல் நாம் இராணுவத் தீர்வு போல காட்டிக் கொள்வது தமிழ்ப் போராளிகள் எமது பலத்தை அறிய வேண்டும் என்பதற்காகவே.

இதுவே அந்தச் சிரேஷ்ட அமைச்சர் தரும் விளக்கம். இது என்ன ஏமாற்று வித்தையா அல்லது அரசியல் ஞான சூனியமா அல்லது கபட நாடகமா? அல்லது எங்கள் நாட்டு அரசியல் வாதிகளின் சந்தர்ப்ப வாதமா?

உண்மையாகவே அரசியல் தீர்வைத் தான் அரசாங்கம் நோக்கமாகக் கொண்டிருக்கிறது — விரும்புகிறது என்றல் போர் நிலைமையைத் தோற்றுவித்தல், படை பலத்தைப் பெருக்குதல், அப்பாவி மக்களை அழித்தல் ஆகியவை அவசியமற்றவை. அவைக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதனை அமைச்சர் உடனே செய்தாராயின் அவரின் நேர்மை, கண்ணியத்தை தமிழ் மக்கள் சந்தேகிக்க இடமிராது.

இந்த நாட்டுக்கும் அதுவே நல்லது.

## நாட்டின் குழப்பம் பெரும் கஷ்டம்

### வெளிநாட்டு உதவி காப்பாற்றியதாம்

கொழும்பு,டிச.18 வெளி நாட்டு உதவிகள் கிடைத்திருக்காவிட்டால் வடக்கு—கிழக்குக் குழப்பங்களால் நாட்டு மக்கள் பெரும் கஷ்டத்துக்கு ஆளாகி இருப்பர்.

இதற்காக நாம் உலக வங்கி, சர்வதேச நாணயச் சபைக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

இப்படி நிதி அமைச்சர் ரொனி டி மெல் கூறினர்.

ஹினிதுமையில் இலங்கை வங்கிக் கிளை ஒன்றைத் திறந்து வைத்து நிதி அமைச்சர் பேசினர்.

அவர் மேலும் சொன்னதாவது;

உலகவங்கி, சர்வதேச நாணயச் சபை சொல்லும் சகல நிபந்தனைகளையும் நாம் ஏற்பது இல்லை.

சில ஆண்டுகளுக்கு முன்னர் சில நிபந்தனைகளை ஏற்க மறுத்து விட்டோம். உடனே அவர்கள் கடன் தர மறுத்து விட்டார்கள்.

வெளிநாடுகளுக்கு எமது நாட்டை அடகு வைத்து விட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றார்கள்.

உண்மையிலேயே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு கணக்குத் தெரியாது. கணக்குத் தெரிந்து இருந்தால் இப்படி எல்லாம் அவர் பேசமாட்டார்

இப்படி நிதி அமைச்சர் சொன்னர்.

# திருவெம்பாவையும் திருவாதிரையும்

## ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழிச் சிறப்பு

ஞாயிறு வடதிசையிற் பயணஞ் செய்யும் ஆறு மாத காலத்தை உத்தராயணம் என்பர். இது தேவர்களுக்கு பகற் காலமாகும்.

ஞாயிறு தென் திசையிற் பயணஞ் செய்யும் மற்றைய ஆறு மாத காலத்தைத் தட்சணாயினம் என்பர். இது தேவர்களுக்கு இராக்காலமாகும் இந்த இராக் காலத்தின் இறுதியாகிய மார்கழிமாதம் தேவர்களுக்கு புலரிக் காலமாகும். அந்தப் புலரிக் காலத்திலே தேவர்கள் யாவருந் தேவதேவராகிய சிவபெருமானை அர்ச்சிப்பர்.

இந்த மண்ணுலகத்திலே சைவமக்கள் புலரிக் காலத்தில் நித்திரை விட்டெழுந்து நீராடி சிறந்த மலர்களைக் கொய்து சிவபிரானின் திருவடிகளை அருச்சித்து, திருமுறைகளைப்பாடி "கொடிய தீவினைகளை நீக்கி எங்களை ஆட்கொள்வீர்!' என்று சொல்லி வழிபடுவர். இவர்கள் மார்கழி மாதத்துப் புலரிப் பொழுதிற் சிறப்பாக வழிபடுவர். அதிலும் திருவெம்பாவை நாள் பத்துஞ் சிறந்தது என்றும் கூறுவர்.

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நாள் நடராஜப் பெருமானுக்குச் சிறப்பான விழா நாளாதலின் அத்திருநாளில் நடேசப் பெருமானுக்கு விசேட அபிஷேகஞ் செய்வர். அந்த ஆதிரை நாளையொட்டி முன்னுகவுள்ள ஒன்பது நாட்களும், விழாச் செய்து வழிபடுவர். இதைத் திருவாதிரைத் திருவிழா என்பர்.

திருவாதிரைத் திருவிழா நடேசப்பெருமானுக்குச் சிதம்பரத்தில் மிகவும் சிறப்பாக நடத்தப்படும். சிதம்பரத்தைப் போன்று காரை நகர் சிவன் கோவிலிலும் இத் திருவிழா நடத்தப்படும். இதனுலேயே இத் தலத்தை "ஈழத்துச் சிதம்பரம்"! என்று அடியார்கள் போற்றுகின்றார்கள்,

திருவாதிரைத் திருவிழா நடக்கின்ற பத்துத் தினங்களிலும் சைவ மக்கள் அனைவரும் அவனருளாலே அவன் தாள் வணங்கிப் பேரானந்தப் பெருவாழ்வு எய்துகின்றார்கள்! தினமும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசுவரப் பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூசை நடைபெற்ற பின் மணிவாசகப் பெருமானுக்குப் பூசை நிகழும். அதன் பின் அப்பெருமானைக் கூத்தபிரான் சந்நிதிக்கு எழுந்தருளச் செய்து திருவெம்பாவையை ஓதுவர்.

அதனைத் தொடர்ந்து சந்திரசேகரப் பெருமானும் அம்பாளும் இரண்டாம் வீதியில் திருவுலா வந்து அடியார்களுக்குக் காட்சி கொடுப்பார்கள். மாலையிலும் பூசையின் பின் திருவெம்பாவை ஓதப்படும். ஒன்பதாம் நாளாகிய இரதோற்சவத்தன்று நடராஜப் பெருமான் செவ்வந்திப் பூக்களினுலும், திருவாபரணங்களினுலும் அலங்கரிக்கப்பட்டு ஆனந்தத் தாண்டவம் ஆடிக் கொண்டு சிவகாம சுந்தரி அம்பாளோடு உள் வீதியில் விசேட மேள வாத்தியத்தோடு வரும் காட்சியைக் கண்டு அடியார்கள் உளமுருகி வழிபடுவார்கள்.



நடராசப் பெருமானும் ஏனைய மூர்த்திகளும் பஞ்ச இரதங்களில் மூன்றும் வீதியில் பவனி வரும் காட்சி ஆனந்தமானது அற்புதமானது.

இத்தலத்தில் மூன்றும் வீதியைப் போன்ற நீளமான வீதி வேறு எங்கும் இல்லை எனலாம். முதலாம் இரதத்தில் பிள்ளையாரும், வள்ளி தெய்வானை சமேதசுப்பிரமணியரும், இரண்டாம் இரதத்தில் பூரணை புட்கலை சமேத ஐயனுரும், மூன்றும் இரதத்தில் ஆனந்த நடராஜப் பெருமானும், நான்காம் இரதத்தில் சிவகாம சுந்தரி அம்பாளும், ஐந்தாம் இரதத்தில் மாணிக்கவாசகப் பெருமானும் எழுந்தருளியிருந்து வீதி வலம் வருவார்கள்.

தேர்த்திருவிழா அன்று இரவு பதினெட்டு நாழிகையின் மேல் இருபத்து நான்கு நாழிகை வரையில் ஆதிரை அபிஷேகமும், அதன்மேல் சூரியோதயத்தின் முன் ஆருத்திராதரிசனமும் நிகழும். இத்தலத்தில் நடக்கும் திருவாதிரை அபிஷேகத்தின் சிறப்பை வருணிக்கவே முடியாது. மிகவும் சிறப்பாக நடைபெறும் அபிஷேகத்தையும், அதன் பின் நடைபெறும் ஆருத்திரா தரிசனத்தையும் கண்டுகளிக்க ஈழத்தின் நாற்றிசைகளிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மெய்யன்பர்கள் ஈழத்துச் சிதம்பரத்திற்கு வருவார்கள்.

திருவாதிரை நாளாகிய பத்தாம் நாள் மாலை நடேசப் பெருமானுக்கும் சிவகாம சுந்தரி அம்பாளுக்கும் விசேட பூசை நடைபெற்று இரண்டாம் வீதியில் திருவுலா வருதல், திருவூடல், உள் வீதியில் தீர்த்தம் ஆகியன நிகழும்.

திருவாதிரைத் திருவிழாக் காலமான பத்து நாட்களிலும் பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதற்காக விரதமிருந்து அங்கப் பிரதட்சணம் செய்வார்கள். காவடியும் எடுப்பார்கள்.

திருவாதிரைத் திருவிழாக் காலத்தில் காரை நகர் மணிவாசகர் சபையினரால் ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாசகர் விழா மிகச் சிறப்பாக நடத்தப்படும். இவ் விழாவில் ஈழத்தையும், தமிழ் நாட்டையும் சேர்ந்த பேரறிஞர்கள் பலர் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவார் கள். மாணிக்கவாசகர் மடாலயத்திலும், சிவாச்சிரமத்திலும் அன்னதானம் நடைபெறும்.

காரைநகர் தெய்வ நம்பிக்கையும், செல்வச் சிறப்பும் மிக்க மக்களைக் கொண்டது தருமசீலர் பலரைத் தன்னகத்தே உடையது. இத்தகைய ஊரில் "ஈழத்துச்சிதம்பரம்" என்று அன்பர்களால் போற்றப்பெறும் திண்ணபுரச்சௌந்தராம்பிகா சமேச சுந்தரேசுவரர் ஆலயம் தூலலிங்கமெனச் சாத்திரங்களாலும் கோத்திரங்களாலும் போற்றப்படும் இராஜ கோபுரத்தைத் தன்னகத்தே அடக்காமலிருந்தது ஒரு பெருங் குறையாகும்.

இக் குறையை நீக்கத் திருவருள் பாலித்ததால் 1965 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கோபுரத் திருப்பணி வேலைகள் சிலகாலம் தடையுற்றிருந்து, பின்னர் 1982 ஆம ஆண்டு தொடக்கம் தற்போதையதிருப்பணிச் சபையினரின் தளராத ஊக்கத்தினுல் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஐயனர் சிவன் கோபுரத் திருப்பணி திருவருளின் கடாட்சத்தினுலும், தருமசீலர்களின் பெரும் பொருள் உதவியினுலும் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் நடைபெற்றதன் விளைவாகக் கருங்கல் வினல் "வானம்" தொடக்கம் "வியாழம்" வரை 18 வரிகள் அடங்கிய மொட்டைக் கோபுரம் பூர்த்தியாகியுள்ளது. இரு கோபுரங்களுக்கும் இற்றை வரை சுமார் 14 அரை லட்சம் ரூபா செலவாகியுள்ளது

வியாழ வரிக்கு மேல் பண்டிகை வேலை செங்கல்லினுலும் சீமெந்தினுலும் கட்டப்படும் இவ் வேலை தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

-- என். கணேசமூர்த்தி --

திருவெம்பாவை என்றவுடன் சிதம்பரம் கோவில்தான் நினைவுக்கு வரும். ஈழத்தைப் பொறுத்தவரை ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும்காரை நகர் சிவன்கோவிலில் திருவெம்பாவையும் அதனேடு சேர்ந்து நிகழும் திருவாதிரை விழாவும் சிறப்பு மிக்கவை.

இன்று திருவெம்பாவை பூஜைஆரம்பமாகிறது. அதனை யொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.



### பொய்யாமொழி

**குறள்:**

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண் டற்று.

**பொருள்:**

பற்றுக்களைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது.

## திருவெம்பாவை

[ இன்று திருவெம்பாவை ஆரம்பமாகிறது. அதனை முன்னிட்டு இன்றுமுதல் உதயனில் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்ததிருவெம்பாவை பாடல்களும் அவற்றின் விளக்கங்களும் தொடர்ந்து வெளி வரும். ]

### கன்னியர் கூட்டத்துள் இருவர் ஒருத்தியை எழுப்புதல்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும்வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனுமாகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

**பொருள்:**

பெண்கள் கூட்டத்தில் ஒருத்தி உறங்குபவள் போல பாவனை செய்து யாராவது தன்னைத் துயில் எழும்புகின்றனரோ என்று விம்மிக் கிடந்த தோழியை நோக்கி, 'ஒளியுள்ளதாய் அகன்ற கண்களையுடைய மாதே! முதலும் முடிவும் இல்லாத அரிய பெரிய சோதியான இறைவனை நாங்கள் புகழ்ந்துபாட, பெண்ணே! நீ கேட்டும் கேளாதவள் போல இன்னமும் கண் வளர்கின்றனையோ? எங்கள் பாட்டின் ஒலியைக் கேட்க முடியாத உன் காதுதான் உணர்ச்சியற்ற காதோ? என்று வினவுகின்றாள்.

அதன்மேல் மற்றும் ஒருத்தி சொல்கிறாள் மகாதேவன் என்ற அந்தத் தேவதேவனுடைய நீண்டகழல் அணிந்த திருவடிகளை நாம்வாழ்த்திப் பாடஅந்த வாழ்த்தொலிகள்போய்வீதியில்ஒலித்து அவள் காதிலும் கேட்டன. கேட்டதுமே அவள் விம்மி விம்மி அழுது தன் உடலை மறந்த நிலையில் பூப்படுக்கையில் இருந்து கீழே புரண்டு நமது மார்கழி நீராடலில் ஒன்றுக்கும் பயன்படாதவளாகி இப்படிக் கிடந்தாள்; என்ன அதிசயம்! இது எங்கள் தோழியின் இயல்பு. இவ்வாறு இரண்டு கன்னியர் ஒருத்தியை எழுப்புகின்றார்கள்.

### ஒருவரையொருவர் பரிகசிப்பதும் இன்னெருத்தி குறுக்கிட்டு இடித்துரைப்பதும்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசியிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

**பொருள்:**

செவ்விய அணிகளை அணிந்தவளே! அலங்காரச் செல்வியே! அல்லும் பகலும் நாம் கூடிப் பேசும்போதெல்லாம், உனது பாசம் முழுவதும் பரஞ்சோதியான சிவனுக்கேயுரியது என்று நீ சொல்வதுண்டு. அப்படிக் கூறியநீ இந்தப் பூம் படுக்கைமீது எப்போது பாசத்தை வைத்துக் கொண்டாய்? பெண்ணே நீ சொல்வாயாக, என்று கன்னியர் கூட்டத்தில் இருந்த ஒருத்தி உள்ளேயிருந்த பெண்ணை நோக்கிக் கேட்கின்றாள்.

அதற்கு அவள், சீச்சீ! அலங்காரச் செல்விகளே! உங்கள் பரிகாசம் இவ்வளவுதானு? இன்னும் பல இல்லையோ?என்று பதில் கேட்கின்றாள்.

இவ்வாறு வீண்பேச்சில் காலம் கழிகின்றதே என்று எண்ணிய இன்னெருத்தி, நீங்கள் விளையாடிக்கொண்டிருக்க தருணமும் வாய்ப்பான இடமும் இதுதானு? தேவர்கள் மெய்யன்பு பெற்றிராததால் வணங்கக் கூசுகின்ற திருவடி மலர்களை நமக்குத் தந்தருளவேண்டுமென்றே வந்தருளும் ஒளியுடையவனும் சிவலோகனும் ஸ்ரீநடராஜப்பெருமானுமாகிய இறைவனுக்கு நாம் அடிமைகள் அல்லவா? இப்படி இந்த நேரத்தில் இங்கே விளையாடி நிற்கும் நாம் ஈசன்மீது அன்புடையவராகத் தகுதி உடையவர்களோ! என்கிறாள்.

உள்ளே இருந்த கன்னிப்பெண்ணை நோக்கி, நீ விரைந்து எழுந்துவா என்று அழைத்து நிற்கிறாள் அந்தக் கட்டிளங்காரிகை.



## வித்தாரம்

எப்பிடி முரளி, சுகந்தானே, இண்டைக்கு ஏதாவது சேதி கொண்டு வந்திருக்கிறியோ, அல்லது நான் தான் விசளம் சொல்ல வேணுமோ?

சரி போகட்டும்.

திங்கட்கிழமை உதயனிலை பாத்திருப்பாய், படித்திருப்பாய். மொரிஷியஸ் நாட்டின் முந்திய பிரதம மந்திரியும், இப்போதைய கவர்னர் ஜெனரலுமான சிபு சாகர் ராம்குலாம் செத்துப்போனர் எண்டு போட்டிருக்கல்லே!

எண்பத்தைஞ்சு வயசிலை அவர் இறைவனடி சேர்ந்திருக்கிறர். அவர் நல்ல மனிதாபிமானி. போன வருஷத்திலை ஐ. நா. கூட்டத்திலை எங்கடை இலங்கைத் தமிழற்றை விஷயத்தைப் பற்றி வெளுத்து வாங்கி, மற்ற நாடுகளின்ரை கவனத்துக்குக் கொண்டு வந்தவர்.

உந்த மொரிஷியஸ் இந்து மா சமுத்திரத்திலை இருக்கிற ஒரு தீவு. அது ஒரு காலத்திலை பிரெஞ்சுக் கொலனியா இருந்தது.. இந்திய வம்சாவளித் தமிழர்களும்— அதாவது எங்களைப் போலைஎண்டு சொல்லன்—அங்கை இருக்கினம்.

எரிஞ்ச இல்லை எரிச்ச யாழ்ப்பாணம் நூல் நிலையத்துக்கு அந்த நாட்டிலை இருந்து நிதி உதவி வந்ததெல்லே. அப்பிடி என்டாப் பாரேன்.

மொரிஷியஸ் நாட்டின் கோவில்கள் கூட்டவை தான் அந்த உதவியை எங்களுக்குத் தந்தது.

அந்த நாட்டிலை உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் மூன்றுவது மாநாடு நடந்தது உனக்குத் தெரியுமோ என்னவோ!

அந்த நாடு தமிழ் மக்களோடை, குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்களோடை கரிசனை கொண்ட நாடு. இது எங்கடை ஆக்களிலை பலபேருக்குத் தெரியாது. அந்த நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த பெரு மகன் ராம்குலாம். அவரது ஆத்ம சாந்திக்காக எங்கடை தமிழ் மக்கள் கட்டாயம் பிரார்த்தனை நடத்த வேணும்.

அது ஒரு பக்கம்.

இன்னெரு செய்தி தெரியுமோ உனக்கு!

இந்தோனேஷியா நாட்டிலை இந்து மதத்தைப் பின்பற்றுவோர் பலர் இருக்கினம். அதுஒரு முஸ்லிம் (அல்லது இஸ்லாமிய) நாடாக இருந்தாலும் மத சுதந்திரம் முழுசாய் இருக்காம்.

எங்கடை நாட்டைச் சேர்ந்த ஆத்மஜோதி முத்தையா இப்ப அங்கை போய் சமயப்பணி செய்வதாகக் கேள்வி.

இந்தோனேஷியாவில் உள்ள மேடான் எண்ட நகரிலை கந்தசஷ்டி விரதமிருக்கிறவை கூடவாம். எங்கடை யாழ்ப்பாணம் மாதிரி.

அங்கை ஆத்மஜோதியார் பிடியரிசித் திட்டம், தர்ம உண்டியல் திட்டம், எண்டு என்னென்னவோ திட்டம் எல்லாம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறராம்.


உதைச் சொல்ல இன்னெண்டு ஞாபகம் வருகுது.

முந்திக் கொழும்பிலை இருக்கயிக்கை ஐ. நா. அதிகாரி ஒருவரைப் பழக்கம். அவர் ஒரு நாள் பின்னேர விருந்துக்குக் கூப்பிட்டார். அந்த அழைப்பை ஏற்றுப் போனேன்.

அங்கை போனதும் நான் பிரமித்துப் போனேன். வீட்டு ஹோலில் ஆனந்தத் தாண்டவம் ஆடும் சிவபெருமானின் சிலை அங்கை இருந்தது. ஒரு கலைப் பொருளாகத்தான் அந்த வெளிநாட்டுக்காரர்வைத்திருக்கிறரோ எண்டு முதலிலை நினைச்சேன்.

அந்த அதிகாரி அமெரிக்கர், கிறிஸ்தவர். என்னேடு கூட வந்த நண்பர் முஸ்லிம்.

(4ம் பக்கம் பார்க்க)



-கொண்டோடி

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அப்பிள்
விற்பனைக்குண்டு.
அவுஸ்திரேலியா அப்பிள்
(POPPY BRAND)
விபரங்களுக்கு:
ஹோட்டல் றெலெக்ஸ்
340, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
T'Phone: 22070 சில்லறை-மொத்த விற்பனை உண்டு

# உதயன்

18-12-85

அவுஸ்திரேலியா ஒறேஞ்
(RIVER BRAND)
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு
விற்பனையாகின்றது.
ஹோட்டல் றெலெக்ஸ்
340, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
TPhone: 22070 மொத்த-சில்லறை விற்பனைக்குண்டு.

★ அதிக எண்ணிக்கையான செஞ்சுரிகள்

★ 9 ஆயிரம் ஓட்டங்களை குவித்த ஒரே வீரர்

# சுனில் கவாஸ்கர்

# சாதனை மன்னன்

## கிரிக்கெட் உலகில் நிகரில்லா வீரர்

### இந்திய வீரருக்கு ஓவல் தலைவணங்கியது

அடிலயிட், டிச. 18
கிரிக்கெட் உலகின் முடிசூடா மன்னன் என்பதை இந்திய முன்னணி துடுப்பாட்ட வீரர் சுனில் கவாஸ்கர் நேற்று மீண்டும் நிரூபித்தார்.

மற்றைய வீரர்கள் இலகுவில் நெருங்கமுடியாத பல சாதனைகளை அவர் அடிலயிட் ஓவல் மைதானத்தில் நேற்று எட்டிப்பிடித்தார்.

உலகக் கிரிக்கெட் சரித்திரத்தில் டெஸ்ட் ஆட்டங்களில் ஒன்பதினாயிரம் ஓட்டங்களைக் குவித்த ஒரே வீரர்.

டெஸ்ட் ஆட்டங்களில் அனேக செஞ்சுரிகளை அடித்த — 31 செஞ்சுரிகளை அடித்த ஒரே வீரர்.

இவை இரண்டும் அவர் நேற்றுத் தாண்டிய கிரிக்கெட் உலகின் இரு பெரும் சாதனைகள்.

இந்த இரு பெரும் சாதனைகளையும் நேற்று முடிவடைந்த இந்திய — ஆஸ்திரேலிய முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் எட்டிப்பிடித்தார்.

இந்த ஆட்டம் முன்னர் எதிர்பார்த்தபடி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த போதும் கிரிக்கெட் உலகில் 'லிட்

## விளையாட்டரங்கு

டில் மாஸ்ரர்' என்று வர்ணிக்கப்படும் சுனில் கவாஸ்கரின் சாதனைக் களமாக அது அமைந்துவிட்டது.

நேற்று ஆட்டம் தொடங்கியபோது 7 விக்கெட் இழப்புக்கு 391 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி தனது துடுப்பாட்டத்தை மாலைவரை தொடர்ந்தது.

மாலையில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸிற்கான சகல விக்கெட்டுக்களையும் இழந்த போது 520 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இந்திய அணி பெற்ற அதிகக்கூடிய ஓட்ட எண்ணிக்கை இது தான்.

இந்தியாவின் இறுதி ஆட்டக்காரர் ஷிவ்லார் யாதவ் பெற்ற 41 ஓட்டங்களும் சுனில் கவாஸ்கர் ஆட்டமிழக்காமல் பெற்ற 166 ஓட்டங்களும் நேற்றைய ஆட்டத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

### கவாஸ்கர் சாதனை

110 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடிய சுனில் கவாஸ்கர் இதுவரை 9006 ஓட்டங்களை குவித்திருக்கிறார். 31 செஞ்சுரிகளை அடித்திருக்கிறார். இதுதவிர அவர் 39 தடவைகள் 50 ஓட்டங்களைத் தாண்டியிருக்கிறார். அவரது சராசரி ஓட்ட எண்ணிக்கை 50க்கு அதிகம்.

நேற்று ஓவல் மைதானம் கவாஸ்கரின் சாதனைக்குத் தலைவணங்கியது. பல்லாயிரக்கணக்கில் கூடிய இந்திய, ஆஸ்திரேலிய ரசிகர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கவாஸ்கர் சாதனைக்கு புகழாரம் சூட்டினார்கள்.

நேற்று இந்திய இறுதி ஆட்டக்காரர் ஷிவ்லால் யாதவ்வும் சுனில் கவாஸ்கரும் இணைந்து ஆடி இறுதி விக்கெட்டுக்கு மட்டும் 94 ஓட்டங்களைக் குவித்தனர்.

இந்திய — ஆஸி டெஸ்ட் ஆட்டத்தில் இறுதி விக்கெட்டிற்கு அதிக ஓட்டங்களைப் பெற்ற சாதனை இதுவாகும்.

### செஞ்சுரியில் செஞ்சுரி

நேற்று கவாஸ்கர் அடித்த செஞ்சுரி அடிலயிட் ஓவல் மைதானத்தில் நிகழ்த்தப்பட்ட நூறாவது செஞ்சுரி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்று இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் முடிவடைந்த பின்னர் ஆஸி தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்தது.

விக்கெட் இழப்பு இன்றி ஆஸி 17 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது.

தொடர்ந்து விளையாடுவதால் வெற்றி-தோல்வி கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதியதால் ஆட்டத்தைக் கைவிட இரு அணித் தலைவர்களும் இணங்கினார்கள்.

வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த இந்த டெஸ்ட் ஆட்டத்தின் ஓட்ட விவரம்:

ஆஸி – 381, விக்கெட் இழப்பின்றி 17 ஓட்டங்கள். இந்தியா – 520 ஓட்டங்கள்.

### மாணவன் கடத்தப்பட்டான்

கொழும்பு, டிச. 18
பதினைந்து வயது மாணவன் கடத்தப்பட்டான்.

பிங்கிரியா பொலீஸ் பகுதியில் உள்ள கொஸ்வத்த என்னும் இடத்தில் ஞாயிறு பகல் இச்சம்பவம் நடந்தது.

சமயப் பாடசாலைக்குச் சென்று விட்டு திரும்பி வருகையிலேயே இனந்தெரியாதோரால் சுஜித் சோமதிலக என்ற இந்த மாணவன் கடத்தப்பட்டான் என்று பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமிர் சொல்கிறார்:

## தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தவே ஸியா அழைக்கப்பட்டார்

சென்னை, டிச. 17
பரம்பரை பரம்பரையாக சகோதரர்கள் போல் வாழ்ந்து வரும் தமிழ்- முஸ்லிம் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தவே இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியாவை இலங்கைக்கு வரவழைத்தார்.

இப்படி தமிழர் விடுதலைக்கூட்டணி, பொலிட்பீரோ கூட்ட முடிவில் வெளியிட்ட அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கை அரசுக்கு எல்லா உதவிகளை வழங்க தயாராக இருப்பதாக பாகிஸ்தான் இலங்கை அரசுக்கு உறுதியளித்து இருப்பது குறித்தும் கூட்டணி தனது அறிக்கையில் கவலை தெரிவித்துள்ளது.

பரம்பரை பரம்பரையாக சகோதரர்களாக தமிழரும் முஸ்லிம்களும் வாழ்ந்து வருகின்றனர். தற்போதைய சூழ்நிலையில் அவர்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்த திட்டம் இட்டேபாகிஸ்தான் ஜனாதிபதியை இலங்கை அரசு வரவழைத்தது.

இஸ்ரவேல் விஷயத்தில் பாகிஸ்தானின் புதிய கொள்கை, மொஸாட் இலங்கைக்கு அழைக்கப்பட்டது ஆகியன குறித்து இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பதற்றம் நிலவுகின்றது.

இது இலங்கைத் தலைவர் ஜெயவர்த்தனாவுக்கு நன்கு தெரியும்.

இந்த பதற்றத்தைத் தணிப்பதும் பாகிஸ்தான் ஜனாதிபதியை இலங்கைக்கு வரவழைத்ததன் இன்னொரு நோக்கமாகும்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### வித்தாரம்

(3ஆம் பக்க தொடர்ச்சி)

நான் ஹோலுக்குள்ளே போனதும் என்னை கண் சிவத்தாண்டவனைத்தான் முதலில் நோக்கியது அந்த அமெரிக்கர் அவதானித்திருக்க வேணும். "நீங்கள் ஒரு இந்துவா?" என்று ஆங்கிலத்தில் கேட்டார். நான் ஆம் என்று பதிலளித்ததும் அவர் தமது மனைவியைக் கூப்பிட்டு, அவளும் ஒரு இந்து என்றும், இந்தோனேஷியாவைச் சேர்ந்தவ ளென்றும் அறிமுகப்படுத்தினார்.

அந்தப் பெண் என்னோடை கதைக்கயிக்கை தான் ஒவ்வொரு நாளும் காலம்புறமும், பின்னேரமும் சிவபூசை செய்வதாகவும், தங்கடைநாட்டிலை இந்து சமயத்தைப் பின்பற்றும் மக்கள் அதிகம் என்றும் கோபுரங்களுடன் கூடிய கோவில்கள் கனக்க இருக்குதெண்டும் சொன்னா.

### மோட்டார் சைக்கிள் ஒப்படைப்பு

மட்டக்களப்பு, டிச. 18
களுவன்கேணி விகாரையில் வைத்து மதகுரு ஒருவரிடமிருந்து கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் நேற்று அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த மோட்டார் சைக்கிள் கடத்தப்பட்டது.

## யாழ் பல்கலைக்கழக டிப்ளோமா பயிற்சி நெறிக்கு தெரிவானோர்

வட்டுக்கோட்டை, டிச 18
யாழ் பல்கலைக் கழகத்தில் 1985 - 1986 கல்வி ஆண்டில் கல்வி டிப்ளோமா பட்டப்பின் பயிற்சி நெறியில் பயிற்சி பெறுவதற்கு தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட பரீட்சையில் தேறிய 93 பேருக்கு கடந்த வெள்ளிக்கிழமை நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

அவர்களில் பகுதி நேரப் பயிற்சி நெறிக்கு 51 பேரும் முழுநேரப் பயிற்சி நெறிக்கு 13 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:

#### பகுதி நேரப் பயிற்சிநெறி

செல்வி எம். எல். தோமஸ், திரு. ஜே. ஜேசுதாசன், திரு. பி. பொன்னம்பலம், திருமதி ஐ. றெஜினு, திரு. ஆர். குமாரசுப்பிரமணியம், திரு. எம். பவானந்தன், திருமதி பி. கமலேந்திரன், திருமதி எஸ். சிவராசா, திரு. எஸ். சுகுமாரன், திருமதி பி. இராசரத்தினம், திருமதி. எஸ். திருநாவுக்கரசு, திரு. எஸ். நடராசா, திரு. எஸ் சுந்தரேசன், திரு. ரி. எவ். மனோகரன், திரு. வி. வில்லவராசா, திருமதி எவ். கிருபாகரன், திரு. எஸ். விநாயகமூர்த்தி, திருமதி வி. மகேந்திரன், திருமதி. ரி. சிதம்பரநாதன், திரு. எம். இராசரத்தினம், திருமதி ஆர். கங்காதரன், திருமதி வி. லக்ஷ்மணன், திரு. ரி. சிவராசா, திருமதி ஆர். சிவகுருநாதன், திரு. வி. ஜெயரத்தினம், திருமதி சி. சுந்தரலிங்கம், செல்வி எஸ். இராசதுரை, திருமதி ஐ. அரியரத்தினம், திரு ஜி. பி. அல்பிறட், திரு. ஏ. நாகரத்தினம், திரு எம். சின்னத்தம்பி, திருமதி பி. இ. சின்னத்துரை, திருமதி எஸ். முத்துலிங்கம், செல்வி ஜி சிங்காரயர், திருமதி ஏ. சிவஞானசுந்தரம், திரு. பி. சுந்தரலிங்கம், திருமதி. வி. பசுபதிப்பிள்ளை, திருமதி. பி. பேரம்பலம், திரு. கே. பரநிருபசிங்கம், திருமதி. எஸ். மகேஸ்வரநாதன், திருமதி ரி. துரைராஜா, செல்வி ரி. சின்னத்துரை, திரு. ரி. துரைசிங்கம், திருமதி. பி. செல்லரெத்தினம், திருமதி ஜி. கந்தசாமி, திருமதி. ஆர். சிவராசா, திருமதி. எம். பற்குண , திரு. பத்மநாத ஐயர் சர்வேஸ்வரஐயர், செல்வி. கே. வீரசிங்கம், திரு. பி. எம். ஜே. அந்தோனி, செல்வி. என் எஸ். செல்லையா.

#### முழுநேரப் பயிற்சி நெறி

திரு. பி. சிறீகரன், திரு. வி. குகதாசன், திரு எஸ். சிறீகரன், திருமதி ஐ. ஜெயக்குமார், திருமதி. வி. விமலநாதன், திருமதி. கே. ஆனந்தசயனம், செல்வி. ஏ. பி. எஸ். பற்றிக், திரு. கே. சிறீஸ்கந்தராசா, செல்வி. கே. சுப்பிரமணியம், திரு. கே. சதாசிவம், செல்வி. சி. சடாட்சரம், திருமதி. எஸ். வி. எல். மில்ஸ், திரு. ரி. சிவநாதன்

வியாபாரிகளுக்கு
ஓர் நற்செய்தி!
நம்பிக்கை - நாணயம் - நேர்மை
* பாடசாலை பாடஉபகரணங்கள்!
* ஸ்ரேசனறிப் பொருட்கள்!
* காகிதாதிகள்!
* மின்சார உபகரணங்கள்!
* தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அப்பியாசக் கொப்பிகள்!
* மொனிற்றேஸ் கொப்பிகள்!
ஆகியவற்றுக்கு
அம்பலவாணர்
அன் சன்ஸ்
196, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24291
குறிப்பு: (i) அப்பியாசக் கொப்பிகளுக்கு முற்பணம் கட்டியவர்களுக்கு இம்மாதம் 23 ஆம் திகதியிலிருந்து விநியோகம் செய்யப்படும்.
(ii) மொத்த, சில்லறை விற்பனையாளர்களின் வசதியை முன்னிட்டு, எமது ஸ்தாபனம் இம் மாதம் 20ஆம் திகதியிலிருந்து 1986ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி வரை சகல விடுமுறைத் தினங்களிலும் வழமைபோல் சேவையாற்றப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

வடக்கு, கிழக்கில், நிர்வாகம் இல்லை

## இலங்கை இன்று ஒரே நாடாக இருக்கிறதா?

### கொல்வின் கேட்கிறார்

கொழும்பு, டிச 18
இலங்கை ஒரே நாடாக உள்ளதா என்பது இன்று சந்தேகத்தில் உள்ளது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இன்று எந்த நிர்வாகமும் இல்லை.

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இப்படிக் கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

அரசியலில் இன்று ஈடுபாடு அதிகமாகிவிட்டது.

இது சர்வாதிகாரத்துக்கு வழி வகுக்கும்.

நாட்டுப் பொருளாதாரமும் சீர்கெட்டு விட்டது.

தேயிலை, றப்பர் போன்ற ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் வீழ்ச்சி அடைந்து விட்டன.

உல்லாசப் பிரயாணத்துறை ஸ்தம்பித்து விட்டது.

வடக்கு, கிழக்கில் ஒன்றுமே நடைபெறுவதாக இல்லை.

மக்கள் எம்பக்கம் திரும்பினால் நாம் அவர்களை தேர்தலை நோக்கி வழிநடத்துவோம்.

இப்படி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா சொன்னார்.

### ரூபவாஹினி

18-12-1985
மாலை:

5-00 — செய்திகள்
5-0ה — ஒலிம்பிக் விளையாட்டு
5-20 — 'பொலோ மீ'
5-30 — குழந்தைகள் நிகழ்ச்சி (சிங்களம்)
6-00 — தேசிய இளைஞர் சேவை மன்ற நிகழ்ச்சி
6-30 — செய்திகள் (தமிழ்)
6-55 — கலை அரங்கம் (தமிழ்)
7-25 — 'கண்டுலக கதாவக்'
8-00 — செய்திகள் (சிங்களம்)
8-25 — ஜெபர்ஸன் (நகைச்சுவை)
9-00 — செய்திகள் (ஆங்கிலம்)
9-20 — சங்கீத அறிமுகம்
9-40 — கியூபன் திரைப்படம்
11-25 — ஒளிபரப்பு முடிவு

### பஸ் சேவை இல்லை

## தபால் சேவை சீர்குலைவு

யாழ்ப்பாணம், டிச. 18
கிளிநொச்சி – பூநகரி பஸ் சேவை இல்லாத காரணத்தினால் அப்பகுதி தபால் சேவை சீர்குலைந்துள்ளது.

செட்டியக்குறிச்சி-கிராமசேவையாளர் பிரிவு இணக்க சபை இவ் விஷயத்தை கிளிநொச்சி அரசாங்க அதிபர், வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இதே வேளை இது பற்றி பூநகரி பிரஜைகள் குழுத் தலைவர் திரு. பொ. தங்கராசா, வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவரை நேர் முகமாகச் சந்தித்து முறையிட்டார்.

உடன் நடவடிக்கை எடுப்பதாக சபைத் தலைவர் உறுதியளித்து இருப்பதாக பிரஜைகள் குழுத் தலைவர் திரு. தங்கராசா தெரிவித்துள்ளார்.

## வலந்தலை பொன்னாலை...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

இருந்து புல்டோஸர் ஒன்றையும் அவர்கள் கொண்டுவந்தனர். அதன் பின் பலர் நடந்தும் வந்தனர். வலந்தலைச் சந்தியில் ஒரு கடையை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

பொன்னாலைச் சந்திக்கு பஸ்கள் வந்ததுதான் தாமதம் படையினர் சரமாரியாகச்சுடத்தொடங்கினர்.

அங்கு நின்ற சனங்கள் சுளறியபடி ஓடத் தொடங்கினர். மீன் வாடியில் உள்ளவர்கள் துப்பாக்கிக் குண்டுகள் தாக்கிக் காயமடைந்தனர்.

பின்னர் படையினர் அங்கு நின்றவர்களை எல்லாம் நிலத்தில் பலவந்தமாக இருக்கும்படி அமர்த்தினர்.

அதன்பின் அந்த இடத்தில் உள்ள ஒரு கடையை படையினர் சோதனை இட்டனர். தேடுதலிலும் ஈடுபட்டனர்.

### ஹெலிக்கொப்டரில் வந்தனர்

அந்தச் சமயத்தில்பலாலியில் இருந்து ஹெலிக்கொப்டரில்ஆயுதப்படையினர் கொண்டு வரப்பட்டு பொன்னாலைச் சந்தியில் இறக்கப்பட்டனர். இப்படி பல தடவை நடைபெற்றது.

ஹெலிக்கொப்டரில் வந்து இறங்கிய ஆயுதப் படையினரிடம் காரைநகரில் இருந்து கொண்டு வரப்பட்ட புல்டோஸர் இயந்திரம் ஒப்படைக்கப்பட்டது.

அப்பொழுது காரைநகர் நோக்கி வந்த மினிபஸ் மீது துப்பாக்கிப் பிரயோகம்செய்யப்பட்டது. சாரதிக்கு படுகாயம் ஏற்பட்டது. மினிபஸ் மோசமாகச் சேதம் அடைந்தது. மினி பஸ்ஸில் இரத்தக் கறை நிறையக் காணப்பட்டது.

ஹெலிக்கொப்டரில் வந்த ஆயுதப்படையினர் புல்டோஸருடன் நடந்து திரும்பிச் சென்றனர்.

இ.போ.ச பஸ், மினிபஸ்களில் வந்த ஆயுதப்படையினர் ஹெலிக்கொப்டரில் காரைநகர் முகாம் திரும்பினர்.

பல மணித்தியாலங்களின் பின்னர் பதற்றத்துடன் அதே இபோசபஸ்ஸில் பிரயாணிகள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

இச்சம்பவங்களின் போது, ஆயுதப்படையினரால் 5 தமிழர்கள் விசாரணைக்காக கைது செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து அப்பகுதி இ.போ.ச, மினி பஸ் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன. கடைகள் இழுத்து மூடப்பட்டன.

புல்டோஸருடன் திரும்பிச் செல்கையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடியே சென்றனர். வாகனங்கள் சோதனை இடப்பட்டன.

* மேற்கு ஜெர்மனி
* பிரான்ஸ்
* இத்தாலி
ஆகிய நாடுகளுக்கு உங்களை எமது பிரதிநிதி
DECEMBER 26 ஆம் திகதி
இங்கிருந்து அழைத்துச் செல்வார்.
மற்றும்
பாஸ்போர்ட், பொண்ட், விசா
என்பவற்றுக்குத் தொடர்புகொள்ளவும்.
லிப்ருஸ் லிமிட்.,
R. G.கட்டடம், 70,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
60, Sea Beach Road, PETTAH, T'Phone: 29148

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 18-12-1985